அதேபோன்று, பட்டுக்கோட்டை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நபார்டு வங்கியின் உதவியோடு கிட்டத்தட்ட 2¼ கோடி ரூபாயில் புதிய கட்டடம் கட்டப்பட்டு முடிக்கக்கூடிய சூழ்நிலையில், கடந்த நான்கு மாத காலமாக அந்தப் பணி சற்றுக் காலதாமதமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. அது ஏன் என்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, அந்தக் கட்டடப் பணிகளை விரைவிலே முடித்துக் கொடுக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொண்டு, நல்ல வாய்ப்பினை அளித்தத் தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

6. அரசினர் தீர்மானம்

விதி 32–ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *12–8–2011 அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ 12–8–2011, வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)
மறுப்போர் ‘இல்லை’ என்க.
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்
மறுப்போரே இல்லை,

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

12–8–2011 அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.